விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, புரட்டாசி - 4 திங்கள் 20.09.2021 மலர் - 2, இதழ் - 167

# ஸ்ரீராமர் கோயிலுக்கு புனித நீர்

அயோத்தியில் ஸ்ரீராமருக்கு கோயில் கட்டும் பணி வெகுவேகமாக நடைபெற்று வருகிறது. இக்கோயிலின் கட்டுமானப் பணியில் பயன்படுத்துவதற்காக, பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் விஜய் ஜாலி நடத்தும் டெல்லி கல்வி வட்டம் என்ற தொண்டு அமைப்பு 115 நாடுகளில் ஓடும் நதி, கடல்களின் நீரை வரவழைத்துள்ளது. இந்த நீர் உள்ள குடுவைகள் ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டன. ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அமைப்பின் பொதுச் செயலாளர் சம்பத் ராய், பல நாடுகளின் தூதர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அப்போது பேசிய ராஜ்நாத் சிங், 'வசுதைவ குடும்பகம்' எனப்படும் உலகமே ஒரு குடும்பம் என்பதை நம் தேசம் உறுதியாக நம்புகிறது. அதற்கு வலுசேர்க்கும் வகையில் இந்த யோசனையை செயல்படுத்தியதற்கு பாராட்டுகள். கோயில் கட்டுமானம் முடிவதற்குள் உலகில் மீதமுள்ள 77 நாடுகளில் இருந்தும் நீரை கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். ஸ்ரீராமருக்கான கோயில் என்பது நம் நாட்டில் வாழும் அனைவரும் பெருமைப்படும் விஷயம். ஜாதி, மதம், மாநிலம் என்ற பாகுபாடுகள் இல்லாமல் இருப்பதே நம் நாட்டின் பாரம்பரியம்' என்று கூறினார்.



விஜயபாரதம்

# குடிசை வாரிய வீடு தி.மு.க. தகராறு



விஜயபாரதம்

கோவை மாவட்டம் கிட்டசூராம்பாளையத்தில் குடிசை மாற்று வாரியம் சார்பில், 35 கோடி ரூபாய் மதிப்பில் 512 குடியிருப்புகளுடன் அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இதில் வீடுகளை ஒதுக்கித்தர கோரி தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் மாணிக்கராஜ், தி.மு.க நகர தொழில்நுட்ப பிரிவு துணை அமைப்பாளர் விவேக் ஆகியோர் விண்ணப்பங்களுடன் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்றனர். யாருக்கு வீடுகள் ஒதுக்குவது என்பது தொடர்பாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதனையடுத்து, வருவாய் துறை அதிகாரிகள், காவலர்கள் தலையிட்டு தி.மு.கவினரை சமாதானப்படுத்தினர். இந்த செய்தியை சேகரிக்க சென்ற பத்திரிக்கையாளர்களை தி.மு.க நிர்வாகிகளின் ஆதரவாளர்கள் தகாத வார்த்தைகளில் திட்டி மிரட்டல் விடுத்தனர்.

# தி.மு.க.வின் இரட்டை நிலைப்பாடு



விஜயபாரதம்

அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மாநில சுயாட்சி, நீட் தேர்வு ரத்து, அண்டை மாநிலங்களுடனான நதிநீர்ப் பிரச்சனை என எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், ஆட்சியில் இல்லாத போது ஒரு பேச்சு, ஆட்சியில் இருக்கும் போது ஒரு பேச்சு என்பது தி.மு.க.வுக்கு கைவந்த கலை. அவ்வகையில், ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, பெட்ரோல், டீசல் விலைகளை குறைக்க, அவற்றை ஜி.எஸ்.டி வரம்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார். இது எப்படியாவது ஆட்சியைப் என்று பிடித்து விடவேண்டும் என்பதற்கான தி.மு.கவின் தேர்தலுக்கு முந்தைய நிலைப்பாடு. ஆனால், தற்போது, ஜி.எஸ்.டியின் கீழ் பெட்ரோலியப் பொருட்களை கொண்டு வருவதை தமிழக அரசு எதிர்க்கிறது. இது தேர்தலுக்கு பிந்தைய தி.மு.க.வின் நிலைப்பாடு. பெட்ரோலியப் பொருட்களை ஜி.எஸ்.டியின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுத்து தி.மு.க.வின் தேர்தலுக்கு முந்தைய நிலைப்பாட்டை நிலைநிறுத்த வேண்டும் என்று தமிழக முதவர் ஸ்டாலினை கேட்டுக் கொள்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

---

# சேவாபாரதி சேவைத்துளிகள்



விஜயபாரதம்

நான்கு ஆண்டுகளாகத் தினமும் ஊரின் நடுவில் தேசியக்கொடி ஏற்றி தேசியகீதம் பாடி தேசத்தை வணங்கும் செங்கற்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் ஒன்றியம் சிறுதாமூர் கிராமத்திற்கு தேசபக்தி மற்றும் ஆன்மீகப் பணிகளுக்காக சேவாபாரதி இயக்கம் 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நாற்காலிகள், மின்விசிறிகள், மின் விளக்குகள், அடுப்பு, நீர் மோட்டார், நீரேற்று உபகரணங்கள் உள்ளிட்டவைகளை வழங்கியது. சிறுதாமூர் ஸ்ரீனிவாசர் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் விஜயகிருஷ்ணன் அவற்றை பெற்றுக் கொண்டார்.



விஜயபாரதம்

சேவாபாரதி தமிழ்நாடு மற்றும் தமிழ்நாடு டைஸ் & கெமிக்கல் மெர்ச்சண்ட்ஸ் அசோசியேஷன் இணைந்து சென்னை செங்குன்றம் பகுதியில் மரக்கன்று நடும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் ராஷ்ட்ரிய சேவாபாரதி இணை பொது செயலாளர் விஜய் புரானிக், சேவாபாரதி தமிழ்நாடு மாநிலத் தலைவர் பி. ரபு மனோகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 108 மரக்கன்றுகள் நடப்பட்டன.

# சிப்காட் புத்தாக்க மையம்


விஜயபாரதம்

தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், புதுமையானயோசனைகள்உள்ளஇளைஞர்களுக்கு வழிகாட்டவும் எஸ்.ஐ.சி எனும், மாநில புத்தாக்க மையம் சிப்காட் சார்பில் துவங்கப்பட உள்ளது. முதற்கட்டமாக ஸ்ரீபெரும்புதுார், ஓசூர் சிப்காட் தொழில் பூங்காக்களில் இம்மையங்கள் துவங்கப்பட உள்ளன. தொழில் துவங்க பயிற்சி வகுப்புகள், தொழில்நுட்ப பயிற்சிகள் இம்மையங்களில் நடத்தப்படும். இதற்காக தனி இணையதள பக்கமும் துவக்கப்படும் என சிப்காட் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

# லவ் ஜிஹாத் குறித்து கம்யூனிஸ்டுகள்

கேரளாவை ஆளும் மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அதன் தொண்டர்களிடையே வினியோகித்த உட்கட்சி நோட்டீசில், கேரளாவில் தீவிர இஸ்லாமிய அமைப்புகளால் ஏற்பட்டுள்ளஅச்சுறுத்தல்களைஅக்கட்சிஒப்புக்கொண்டுள்ளது. 'சிறுபான்மை வகுப்புவாதம்' என்ற தலைப்பில் உள்ள அந்த ஆவணத்தில், 'முஸ்லிம்கள் கல்லூரிகளில் படித்த இளம் பெண்களை பயங்கரவாத பாதைக்கு இழுக்க முயற்சிக்கின்றனர். மாநிலத்தில் வகுப்புவாத ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக பயங்கரவாத சக்திகள் முஸ்லிம் அமைப்புகளுக்குள் ஊடுருவியுள்ளன. கேரளாவில் தலிபான்களுக்கு ஆதரவான விவாதங்கள் நடக்கின்றன. இப்பிரச்சனைகள் குறித்து தொண்டர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இளைஞர்களையும் இளம் பெண்களையும் வகுப்புவாதம், பயங்கரவாத சித்தாந்தங்களுக்குள் இழுக்கின்றனர். கம்யூனிச மாணவர் சங்கம், இளைஞர் அமைப்புகள் இந்த பிரச்சினையில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

---

# கேரளாவில் நர்கோ ஜிஹாத்

கேரளாவில் மலப்புரம் மாவட்டத்தில் போதைப்பொருட்களான 182 கிலோ ஹஷீஷ் எண்ணெய் மற்றும் கஞ்சாவை கலால் வரித்துறையினர் கைப்பற்றினர். இதன் சந்தை மதிப்பு 2.5 கோடி ரூபாய். இந்த கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்ட ஹமீத், அலி, ஷரபுதீன், ஜம்ஷாத் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டனர். சுஹைலுக்கு சொந்தமான இடத்தில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன. விசாரணையில் அவர்கள், ஆந்திராவில் இருந்து போதைப்பொருட்களை கொண்டு வந்ததாகவும் பல ஆண்டுகளாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், போதைப்பொருள் வினியோகத்திற்கு முகவர்களை பயன்படுத்துவதாகவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். கேரளாவில் மாற்று மதத்தினர் வாழ்க்கையை அழிக்க லவ் ஜிஹாத், போதைப்பொருள் ஜிஹாத் உள்ளிட்டவைகளில் முஸ்லிம்கள் ஈடுபடுவதாக விவாதங்கள் நடந்து கொண்டுள்ளது நினைவு கூரத்தக்கது.

# ஸ்ரீநகரில் வைத் துருவா கொண்டாட்டம்



விஜயபாரதம்

ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் பண்டிட் சமூகத்தினர் சமீபத்தில் ஜீலம் நதி என்று அழைக்கப்படும் வைதஸ்தா நதி தோன்றிய நாளை முன்னிட்டு வைதஸ்தா தேவியை வழிபடும் 'வைத் துருவா' விழாவை கொண்டாடினர். முஸ்லிம் பயங்கரவாதிகளால் விரட்டப்பட்டு இடம்பெயர்வதற்கு முன்பு, காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழ்ந்த பண்டிட்டுகள் இந்த நதியில் ஆண்டுதோறும் இவ்விழாவை சிறப்பாக கொண்டாடி வந்தனர். 32 ஆண்டுகளுக்குப் பிறகு, காஷ்மீரின் இந்த பழமையான கலாச்சாரத்திற்கு புத்துயிர் அளிக்கும் விதமாக, சனாதன் தரம் சிதல் நாத் ஆசிரம சபையுடன் இணைந்து சாந்தி மானஸ் அறக்கட்டளையின் முயற்சியால் இவ்விழா நடத்தப்பட்டது. இவ்விழா ஸ்ரீநகரில் உள்ள ஹப்பா கடல் என்ற இடதில் நடைபெற்றது. அன்று மாலை, ஸ்ரீநகரில் உள்ள கோயில்களை ஒட்டிய ஐந்து படித்துறைகளில் அகல் விளக்குகள் ஏற்றி ஆறுகளில் விடப்பட்டன. இந்த கொண்டாட்டங்கள் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த உள்ளூர்வாசிகளின் சிறிய ஊர்வலத்துடன் முடிவடைந்தது. 'காஷ்மீரில் இந்த பழங்கால பழக்கவழக்கங்களின் மறுமலர்ச்சியைப் பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த புனிதமான கொண்டாட்டம் முஸ்லிம்கள், சீக்கியர்கள் உட்பட அனைத்து சமூகங்களிளின் ஆதரவால் மட்டுமே சாத்தியமானது. இது காஷ்மீரில் அமைதி, வகுப்புவாத நல்லிணக்கம், இயல்பு நிலை திரும்புவதை பிரதிபளிக்கிறது' என்று சாந்தி மானஸ் அறக்கட்டளையைச் சேர்ந்த அஞ்சலி கௌல் கூறினார்.

# மின்சார சார்ஜிங் நிலையம்

ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனமான ஹெச்.பி.சி.எல் அடுத்த மூன்று ஆண்டுகளில் 5,000 மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலம், மின்சார வாகன சார்ஜிங் சந்தையில் கணிசமான பங்கைக் கைப்பற்ற இத்திட்டத்தை செயல்படுத்துகிறது ஹெச்.பி.சி.எல். அதுமட்டுமில்லாமல், இதனால்அந்நிறுவனத்துக்கு சொந்தமான 19,000 எரிபொருள் நிலையங்களின் தேசிய அளவிலான நெட்வொர்க்கை மேம்படுத்தவும், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும் முடியும். இந்நிறுவனம் தற்போது சுமார் 85 சார்ஜிங் நிலையங்களைக் கொண்டுள்ளது. ஹெச். பி.சி.எல், இத்திட்டத்தை திறந்த பங்களிப்பு என்ற முறையில் இதனை செயல்படுத்துகிறது. அதில், டாடா மோட்டார்ஸ், கன்வெர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் அதன் பங்காளிகளாக இணைந்துள்ளன.




விஜயபாரதம்

# பழையதை புதுப்பிக்கும் புதிய தொழில்நுட்பம்



விஜயபாரதம்

கட்டடங்கள் கட்ட வழக்கமாக களிமண்ணால் ஆன செங்கற்கள், கான்கிரீட், நிலக்கரி சாம்பல் கற்கள், ஹாலோ பிளாக் போன்றவை பயன்படுத்தப்படுகிறது. இவைகளை தயாரிக்க ஏராளமான ஆற்றல், மூலப்பொருட்கள் செலவு, இயற்கை வளங்கள் அழிப்பு, கார்பன் உமிழ்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது.

மேலும் பழைய கட்டடங்களை உடைப்பதால் உருவாகும் கழிவுகளும் மறுபயன்பாடு இல்லாமல் சேர்ந்துகொண்டே செல்கின்றன. இந்த இரண்டு பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு தரும் விதமாக, பெங்களூருவை சேர்ந்த இந்திய அறிவியல் கழகத்தின் (ஐ.ஐ.எஸ்.சி) விஞ்ஞானிகள், நிலக்கரி சாம்பல், கட்டட கழிவுகள், ஆல்கலி ஆக்டிவேட்டட் பைண்டர்களைப் பயன்படுத்தி கார்பன் உமிழ்வை குறைக்கும், ஆற்றலை மிச்சப்படுத்தும் செங்கற்களை கண்டுபிடித்துள்ளனர். குறைந்த வெப்ப கடத்தி, சிறந்த கட்டமைப்பு, நீண்ட ஆயுள் கொண்டதாகவும் இவ்வகை கற்கள் உள்ளன என்பது ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனை வணிக நோக்கில் செயல்படுத்த ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம், அடுத்த ௯ மாதங்களுக்குள் செயல்படும். இதற்கான பயிற்சி, திறன் மேம்பாடு, தொழில்நுட்ப உதவி, பாரதம் முழுவதும் வணிக கட்டமைப்பை உருவாக்குதல் போன்ற உதவிகளை ஐ.ஐ.எஸ்.சி வழங்கும்.

# என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல்

ஆசாம் மாநிலம், குவஹாத்தியில் சென்ட்ரல் மால், ஆர்.ஜி.பி சாலையின் அருகே காவலர்கள் குழு மீது இரண்டு உல்பா பயங்கரவாதிகள் கையெறி குண்டுகளை வீசிய சம்பவத்தில் பன்னிரண்டு பேருக்கு காயம் ஏற்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பப்பு கோச் போகோலியால், அம்ரித் பல்லவ் கோஸ்வாமி, பரேஷ் பாருஹ், அருணோதோய் தஹோதியா, முன்னா பாருக் ஆகிய ஐந்து குற்றவாளிகளுக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) குவஹாத்தியில் உள்ள என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றத்தில் கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

விஜயபாரதம்

# போலி கரன்சி வழக்கு

கர்நாடக மாநிலம் பெலகவியில் போலி ரூபாய் நோட்டு மோசடியில் ஈடுபட்ட சாரிஃபுல் இஸ்லாம் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ரூ 82,000 மதிப்பிலான போலி நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றத்தால் அவர்களுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை அடிப்படையில் சதாம் ஷேக், ஹகிம் என்ற இரு வங்கதேச குற்றவாளிகளிடம் இருந்துதான் இந்த பணம் கைமாறியதாக கண்டறியப்பட்டது. இதனையடுத்து தலைமறைவான அவ்விருவர் மீதும் என்.ஐ.ஏ, பெங்களூரு என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றத்தில் துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



விஜயபாரதம்

# ரயில்வேயின் நீண்ட லூப் லைன்கள்

ஒரே ரயில் பாதையில் ரயில்கள் ஒன்றை ஒன்று கடக்கும்போது, அவை நிற்க, கடக்க லூப் லைன்கள் ஆங்காங்கு அமைக்கப்படும். பொதுவாக இவை 750 மீட்டர் நீளம் வரை இருக்கும். தற்போது அதிக சரக்குகளை கொண்டு செல்லும் சரக்கு ரயில்கள், அதிவேக ரயில்கள் போன்றவற்றை கையாள ஏதுவாக 1,5 கி.மீ நீளம் கொண்ட லூப் லைன்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில், தெற்கு மத்திய ரயில்வே சார்பில், ஆந்திராவில் நவபேலம் எனும் இடத்தில் இரண்டாவது ரயில்வே நீண்ட லூப் லைன் அமைக்கப்பட்டு உள்ளது. முதலாவது பெரிய லூப் லைன் பிக்காவோலு ரயில் நிலையத்தில் கட்டப்பட்டது. இதைபோல விஜயவாடா கோட்டத்தில் 6 வெவ்வேறு இடங்களில் லூப் லைன்கள் அமைக்க தெற்கு மத்திய ரயில்வேக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.


விஜயபாரதம்

# மிமோ சந்தை விரிவாக்கம்

ஹிந்து சீக்கியர்கள் அசைவ உணவுக்காக கால்நடைகளை வெட்டும்போது அவர்கள் தங்கள் பாரம்பரிய முறையான 'ஜட்கா' என்ற முறையையே பின்பற்றுவர். இது அவற்றை அதிகம் வலி இல்லாமல் கொல்லும் முறை. முஸ்லிம்களின் 'ஹலால்' என்பது விலங்குகளை துடிக்க துடிக்க மெல்ல கொல்லும் ஒரு கொடூர நடைமுறை. இந்த 'ஜட்கா' முறையில் இறைச்சியை தயாரிக்கும் நிறுவனமான 'மீமோ' தார்மிக் வைப்ஸ் குழுமத்தினரால் பெங்களூருவில் துவக்கப்பட்டது. ஆன்லைனில் ஆர்டர் செய்து வீட்டிலேயே பெறும் வகையில் நவீன முறையில் நடத்தப்படுவதால் ஆரம்பித்த சிறிது காலத்திலேயே 'மெமோ' அங்கு பிரபலம் அடைந்துள்ளது. இதனை அடுத்து அந்நிறுவனம், தனது கிளைகளை தேசமெங்கும் விரிவு படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

விஜயபாரதம்

meamo
meat.memories.&more

# டெக் நிறுவனங்களை கைப்பற்றும் சீனா



விஜயபாரதம்

சீன அரசு, டிஜிட்டல், தொழில்நுட்பத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் தனியார் நிறுவனங்கள் அனைத்தையும் அரசு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது, அந்த நிறுவனங்களிடம் இருக்கும் உலக மக்களின் தகவல்கள் அனைத்தும் கைப்பற்றுவது என்ற மிகப்பெரிய திட்டத்தைக் கையில் எடுத்துள்ளது. இத்திட்டத்தின் முதல் படியாகச் சில நாட்களுக்கு முன்பு சீனாவின் மிகப்பெரிய ஆன்லைன் டாக்சி சேவை நிறுவனமான DIDI நிறுவனத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர அனைத்து வேலைகளையும் வெற்றிகரமாக செய்து முடித்தது. அடுத்ததாக, அலிபாபா குழுமத்தின் நிதியியல் சேவை பிரிவின் அலிபே நிறுவனத்தில் கை வைத்துள்ளது சீன அரசு. அலிபே பேமெண்ட் மற்றும் டிஜிட்டல் நிதியியல் தளம் சீனா, பாரதம் உட்படப் பல ஆசிய நாடுகளில் இயங்கி வருகிறது. அலிபே தளத்தில் சுமார் 100 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் தரவுகளை வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே, அலிபாபா குழுமத்தின் நிறுவனர் ஜாக் மா இருமுறை கைது செய்யப்பட்டு ரகசிய இடத்தில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அலிபே நிறுவனத்தின் 35 பில்லியன் டாலர் மதிப்பிலான பங்கு வெளியீட்டு திட்டத்தை தடை செய்தது சீன அரசு என்பது நினைவுகூரத்தக்கது.

# ஏசி வேண்டாம் பெயிண்ட் போதும்


விஜயபாரதம்

அமெரிக்காவில் உள்ள பர்டியூ பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து அடர் வெள்ளை நிற பெயிண்ட் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இந்த வெண்மை நிற பெயிண்ட் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. உலக வெப்பமயமாதலை தடுக்கும் வகையில் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த வெண்மை நிற பெயிண்ட், சூரிய வெப்பத்திலிருந்து கட்டிடத்தை பாதுகாப்பதுடன் குளிர்ச்சியையும் கொடுக்கும். இந்த பெயிண்ட் 98.1 சதவீதம் அளவுக்கு சூரிய வெப்பத்தை பிரதிபலித்துவிடும் என்பதால், எந்த ஒரு ஆற்றலும் இல்லாமலேயே சுற்றுப்புற வெப்பநிலையை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும். அதாவது ஆயிரம் சதுரஅடி கொண்ட மாடி பரப்பளவில் இந்த பெயிண்டை நாம் ஒரு கோட்டிங் அடித்தாலும், 10 கிலோவாட் மின் ஆற்றலை பயன்படுத்தும் ஒரு ஏசியால் கிடைக்கும் குளிர்ச்சி, இந்த பெயிண்ட் அடிப்பதன் மூலமாக கிடைக்கும் என கூறப்படுகிறது.


# செவ்வாயில் வீடு



விஜயபாரதம்

பூமியை விட்டு செவ்வாய் உள்ளிட்ட வேற்று கிரகங்களில் குடியேறுவது என்பது மனித குலத்தின் நீண்டகால திட்டம். ஆனால், பூமியில் இருந்து ஒரே ஒரு செங்கல்லை செவ்வாய் கிரகத்திற்கு ஆகும் செலவு 2 மில்லியன் டாலர்கள். இவ்வளவு செலவு செய்து அங்கு வீடுகள் கட்டுவது என்பது இயலாத காரியம். இதற்கு மாற்று கண்டறிய பல்வேறு ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் மான்செஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், நிலப்பரப்பிற்கு வெளியே உள்ள தூசிகளுடன் மனித இரத்தத்தில் உள்ள புரதம், சிறுநீர், வியர்வை, கண்ணீருடன் கலந்த கலவையால் ஒரு காங்கிரீட் கலவையை உருவாக்கி உள்ளனர். மேலும், அந்த கிரகங்களின் தூசிகளுடன் மனித உயிரியல் கழிவுப் பொருட்கள், யூரியாவைச் சேர்ப்பதன் மூலம் அந்த காங்கிரீட் வலிமையை 300 சதவிகிதம் அதிகரிக்க முடியும் என்றும் கண்டறிந்துள்ளனர்.

---



விஜயபாரதம்

# உளவு பார்க்கும் சீன விஞ்ஞானிகள்

கடந்த ஜூலை 2019ல், வின்னிபெக்கில் உள்ள கனடாவின் தேசிய நுண்ணுயிரியல் ஆய்வகத்தில் வேலை செய்துவந்த சீன வைரலாஜிஸ்டுகள் சிலர், அங்கிருந்து திருடப்பட்ட எபோலா, நிபா வைரஸ்களை சீனாவிற்கு அனுப்பியது கண்டறியப்பட்டதால் வெளியேற்றப்பட்டனர். அந்த விவகாரத்தில் பெரிய திருப்பமாக, வெளியேற்றப்பட்ட விஞ்ஞானிகளுடன் சீனாவின் உயர்மட்ட ராணுவ விஞ்ஞானியான மேஜர் ஜெனரல் சென், தான் யார் என்று காட்டிக்கொள்ளாமல் எபோலா நோய் குறித்த இரண்டு ஆய்வுகளில் பங்கெடுத்தார் என்ற செய்தி வெளியாகி உள்ளது.

மேஜர் ஜெனரல் சென், சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக் குழு உறுப்பினராக உள்ளார். இந்த அமைப்பு சீனாவின் உயர் மட்ட தலைமைக்கான மதிப்புமிக்க ஆலோசனை அமைப்பாக செயல்படுகிறது. சீனாவின் ஒற்றை டோஸ் கோவிட் 19 தடுப்பூசி ஆராய்ச்சி பங்களிப்புக்காக செப்டம்பர் 2020ல் நடந்த விழாவில் சீன அதிபர் ஷி ஜின்பிங்கால் மேஜர் ஜெனரல் சென் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், இச்சம்பவம் குறித்து கூறுகையில், ‘நேட்டோ நட்பு நாடுகளை பல்வேறு வழிகளில் உளவு பார்க்கும் சில நாடுகளின் முயற்சிகள் அதிகரித்திருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது’ என தெரிவித்தார்.

# அன்னி பெசண்ட் அம்மையார்



விஜயபாரதம்

ஒரு சாதாரண குடும்பத்தில் லண்டனில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தவர் அன்னி வூட். தனது 19வது வயதில் 1867ம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்பவரை மணந்தார். இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். பெண்ணுக்கு ஏற்பட்ட நோயினால் மனமுடைந்து போன அன்னி நாத்திகரானார். கணவரிடம் இருந்து 1873ல் பிரிந்து வாழ முடிவெடுத்தார்.

பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதினார். சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் எழுதினார். விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். மூடப் பழக்கவழக்கங்களுக்கு எதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார்.. 'லிங்க்' என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி பாரதம், அயர்லாந்து விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக எழுதினார். The Secret Doctrine என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் சந்தித்தார். இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திகவாதத்தை கைவிட்டு ஆத்திகரானார்.

பிளேவட்ஸ்கியின் பிரம்ம ஞானசங்கத்தில் உறுப்பினரானார். மார்க்சியவாதிகளுடன் தனது உறவுகளைத் துண்டித்தார். 1891ல் பிளேவட்ஸ்கி இறந்ததை அடுத்து பிரம்ம ஞான சங்கத்தில் முக்கிய பொறுப்பாளரானார். 1893ல் முதல் முறையாக பாரதம் வந்தார். அடையாறில் பிரம்ம ஞானசங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். ஹிந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்து பல நூல்களை எழுதினார். பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு ஹிந்து சமய விளக்கங்களை முறைப்படி பெற்றார். பாரத கலாச்சார உடை தரித்து ஹிந்துவாகவே வாழலானார்.

பாரதத்தில் ஆங்கில அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக 'காமன் வீல்' என்ற வாரப் பத்திரிகை, நியு இந்தியா என்ற நாளேடு ஆரம்பித்தார். 190ல் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங்கினார். டிசம்பர் 1916ல் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தேர்வானார். பின்னர் காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் தேச விடுதலையில் ஈடுபாடு காட்டி வந்தார். தனது 87ம் வயதில் செப்டம்பர் 20ல் சென்னை அடையாறில் அன்னி பெசண்ட் காலமானார். அன்னி பெசண்ட் அமைத்த அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது.